**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.243/2022**

07.12.2024 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.
வாதி சாட்சி 3 மணி, குறுக்கு விசாரணை:(1ம் பிரதிவாதி தரப்பில்)

நான் தாக்கல் செய்துள்ள பிராமாண வாக்குமூலத்தில் என்ன விவரங்கள் உள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி கஸ்துாரி என் மருமகள் என்று கூறியுள்ளேன் என்றால் ஆமாம். ஆனால் வாதி என்னுடைய நேரடி மருமகள் இல்லை என்றும் மருமகள் முறை என்றும் சொன்னால் சரிதான். கஸ்துாரி என்ன பரிகாரத்திற்கு வழக்கு போட்டுள்ளார் என்றால் சொத்தில் பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளார். வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் கொங்கம்பட்டு என்ற ஊரில் உள்ளது. நான் வசிப்பது கரையாம்புத்துார் என்றால் ஆமாம். இரண்டு ஊருக்கும் இடையில் 15 கிமீ துாரம் இருக்கும் என்றால் 8 கிமீ துாரம் தான் இருக்கும். கொங்கம்பட்டு கிராமத்தில் எனக்கு சொத்து இல்லை என்றால் சரிதான். வாதி கஸ்துாரிக்கு பூர்விக சொத்து இருந்ததா என்றால் இருந்தது, வாதியின் அப்பாவிற்கு அவருடைய அப்பா கொடுத்த சொத்து இருந்தது, அதுதான் பூர்விக சொத்து ஆகும். தாவா சொத்து 3ம் பிரதிவாதி ஜெயசந்திரன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதி கஸ்துாரியின் அப்பா பெயரில் உள்ள சொத்து சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் வாதியின் அப்பா பெயரில் இருந்த சொத்தை விற்றுவிட்டு ஜெயச்சந்திரன்(3ம் பிரதிவாதி) தாவாவில் கண்ட சொத்தை வாங்கியுள்ளார். அதனால் வாதியின் அப்பா பெயரில் இப்போது சொத்து எதுவும் இல்லை என்றால் சரிதான். கஸ்துாரி மற்றும் அவரது அப்பா பிறந்து வளர்ந்தது எந்த ஊர் என்றால் புதுச்சேரி மாநிலம் கீழூர் ஆகும். கீழூரில் உள்ள ஒரு சொத்து (வீடு) குறித்து வாதி கஸ்துாரி புதுச்சேரி நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும்

வாதியின் கணவர் சொல்லிய வகையில் எனக்கு தெரியும் என்று கூறியுள்ளேன் என்றால் வாதியும் வாதியின் கணவரும் கூறியுள்ளார்கள். வாதி எனக்கு மருமகள் முறை என்பதால் அவருக்கு சாதகமாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் டிராக்டர் ஓட்டுவதாகவும் அந்த வகையில் தாவா சொத்தில் டிராக்டர் ஓட்டியதாகவும் சொல்வது பொய் என்றும் தாவா சொத்திற்கு நான் வந்ததேயில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதி ஜெயசந்திரன் கொத்தனார் வேலை செய்கிறார் என்றால் சரிதான். தாவா சொத்து 3ம் பிரதிவாதி அவர் தனிப்பட்ட முறையில் உழைத்து சம்பாதித்த சொத்து என்றும் அந்த சொத்திற்கும் பொதுகுடும்பத்திற்கும் சம்மந்தமில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பூர்விக சொத்தை விற்று தாவா சொத்தை 3ம் பிரதிவாதி வாங்கியதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. பூர்விக சொத்து எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

(3ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது)

மறுவிசாரணை: இல்லை.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.